(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(1).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 யூலை 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 ஓகத்து 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2602/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 65 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமும் ஒழுங்கும் தொடர்பான பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படாமல் உள்ளது என்பதாகவும்; ஆயுதம் தாங்கிய குழுக்கள் வடக்கிலும் கிழக்கிலும் பல்வேறு குற்றச்செயல்களைப் புரிகின்றனர் என்பதாகவும்; பொலீசார் அரசியல் மயப்படுத்தலுக்கு உள்ளாகின்றனர் என்பதாகவும் உள்ள கூற்றுகள் தொடர்பாக அரசாங்கத்தின் பதில் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையில் சுடு படைக்கலங்களின் உபயோகத்தைத் தொடர்ந்து அரசியல் வன்முறை அதிகரித்துள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது எந்தத் திகதி தொடக்கம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2930/ '12

கௌரவ புத்திக பதிரண,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் உடவலவ அலுவலகத்திற்கு 2010 ஆம் ஆண்டில் 26 ஆசனங்களைக் கொண்ட பஸ் வண்டியொன்றும் குரூ கெப் வண்டியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வாகனத்தையும் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) இதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனின், ஒவ்வொரு வாகனத்தையும் கொள்வனவு செய்வதற்காக திறைசேரி அங்கீகரித்த பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இரண்டு வாகனங்களினதும் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத் தொகையை விஞ்சியிருப்பின், மேலதிக பணத் தொகையை செலவிடுவதற்காக நிதி ஏற்பாடுகள் பெறப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல்வாங்கல் தொடர்பில் மோசடி இடம்பெற்றிருப்பின் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

2940/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) இலங்கை தரைப்படையிலிருந்து பல படைவீரர்கள் தலைமறைவாகியுள்ளனர் என அறிக்கையிடப்பட்டிருப்பது ஏன் என்பதையும்;

(ii) இலங்கை தரைப்படையின் தலைமறைவாகியுள்ள படைவீரர்களுக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா அல்லது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருகின்றதா அல்லது அவர்களின் குற்றப்பணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iii) மன்னிப்பு வழங்கப்படாவிடின் சட்டரீதியான அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், சட்டரீதியாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தலைமறைவாகியுள்ள படைவீரர்களின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இலங்கை தரைப்படையைச் சேர்ந்த ஆளணியினர் படை நடவடிக்கையின் போது காணாமற்போனமையால் அல்லது தலைமறைவாகியமையால் மீதப்படுத்தப்பட்டுள்ள பணத்தொகையையும் அவர் கூறுவரா?

(இ) இன்றேல் ஏன்?

2965/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில்வாய்ப்புகள் வழங்கப்படுவதாகக் கூறி அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) அவர்களில் ஒரு பிரிவினருக்கு மாத்திரம் பயிற்சிக்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

(iii) மேற்படி பயிற்சியைப் பெற்ற பட்டதாரிகளில் தெரிவுசெய்யப்பட்ட பிரிவினருக்கு மாத்திரம் தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசியல் நிர்ப்பந்தங்களின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதையும்

(iv) பயிற்சி பெற்ற ஏனைய பட்டதாரிகள் தொழில்வாய்ப்பின்றி உள்ளனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நேர்முகப் பரீட்சையின் பின்னர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பட்டதாரிகளுக்கு அரசியல் நிர்ப்பந்தங்களின் பேரில் தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு செயலாற்றிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) பயிற்சி பெற்றுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் எத்தகைய நிர்ப்பந்தத்துக்கும் கீழ்படியாது தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3261/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு வெளி சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகள் உரித்தாகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் அப் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் பெறுமதி அண்ணளவாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3342/ '12

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் மாவிலாறு பயிர்ச் சேதம் தொடர்பில் கமக்காரர் ஓய்வூதியத்தில் இருந்து பணம் செலுத்தப்பட்டதா;

(ii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு செலுத்தப்பட்ட கமக்காரர்களின் எண்ணிக்கை, கமக்காரரொருவருக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் அதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

(iii) மேற்படி பணம் செலுத்தப்படுகையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா;

(iv) ஆமெனில் மேற்படி மோசடி புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா;

(v) வழங்கப்பட்ட தண்டனை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3410/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் ஊழியர்களால் இடர் கடன் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் இடர் கடன் வழங்கப்பட்டுள்ள மேற்படி திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் இடர் கடனாக வழங்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3413/ '13

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா செட்டிக்குளத்தைச் சேர்ந்த சிவபாலன் சத்தியகார என்பவர் கைதுசெய்யப்பட்டு சிறையிலிடப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர் உள்ள சிறைச்சாலை எதுவென்பதையும்;

(iii) இவர் சிறைக்கைதியாகவா அல்லது சந்தேக நபராகவா சிறையிலிடப்பட்டுள்ளார் என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, குறிப்பிட்ட நீதிமன்றம், வழக்கு இலக்கம் மற்றும் வழக்கின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமைக்கான குற்றச்சாட்டுக்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சிவபாலன் சத்தியகார என்பவரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3445/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(ii) அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள், ஒவ்வொரு அபேட்சகரும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் உள்ளடங்கிய பட்டியலொன்றை பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலத்துக்கமைய வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களில் சித்தியடைதல் மற்றும் சித்தியடையாமை தொடர்பாக தற்போது பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் வதந்திகள் பரவுவதால் அப்பரீட்சையின் பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவுரை வழங்குவாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3468/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களுக்கு கமத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கும் நோக்கத்துடன் கல்லோயா திட்டத்துடன் இணைந்ததாக, 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரி (Hardy Advanced Technical College) கொண்டு நடத்தப்படுவதன் இன்றைய நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரி, 1997ஆம் ஆண்டு ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரியென இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் மூலம் இன்றளவில் நடாத்தப்படும் கற்கைநெறிகள் யாவை என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத மேற்படி நிறுவனத்திற்கு, நிதி ஒதுக்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாணத்தில் மிகவும் முக்கியமான கல்வி நிறுவனமாக விளங்கும் ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் பாடநெறிகள் அபிவிருத்தியை மாகாணத்திலுள்ள இளம் தலைமுறையினருக்குப் பொருத்தமான வகையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3581/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய ஊழியர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடுகின்ற குறித்த சங்கத்தின் அங்கத்துவப் பணம், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு உரித்தான சில பணியிடங்களிலிருந்து 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை குறித்த சங்கத்தின் தலைமையகத்துக்கு வழங்கப்படாதுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி அங்கத்துவப் பணம் உள்ளிட்ட செலுத்த வேண்டிய அனைத்துப் பணத்தையும் தேசிய ஊழியர் சங்கத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், குறித்த திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3596/ '13

கௌரவ காமினீ ஜயவிக்ரம பெரேரா,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வேரெஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்காக கெஸ்பேவ பிரதேசத்திலிருந்து சுவீகரிக்கப்படுகின்ற காணிகளின் உரிமையாளர்களது பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி நபர்களிடமிருந்து சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காணிகளில் பயிரிடப்பட்டுள்ள வேளாண்மைப் பயிர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3656/ '13

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனையின் 47 ஆம் பக்கத்தில் அங்கவீனரான வயோதிப சமுர்த்தி பெறுநர் ஒருவரைக் கொண்டுள்ள குடும்பத்திற்கு ரூபா 3000/- மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் 193 ஆம் பக்கத்தின்படி இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கூற்றுக்களின் பிரகாரம், உரித்தாகின்ற கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கவீன நிலையிலுள்ள சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றவரான குருநாகல், பமுனாகொட்டுவ, கடிஹாரயவில் வசிக்கும் டபிள்யு.எம்.பீ.ஏ. வீரசேகர 2012.05.14 ஆம் திகதி பலவீனர்களுக்கான தேசிய செயலகத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பம் தற்போது காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ரூபா 3000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு 2012.05.21 ஆம் திகதியிலிருந்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள திரு. வீரசேகரவுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3772/ '13

கௌரவ விஜித பேருகொட,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டத்தின் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நன்மையடையும் நுகர்வோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவினம் யாதென்பதையும்;

(v) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்திற்கென செலவிட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(vi) குறித்த செலவுகளை ஏற்கின்ற நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3858/ '13

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்ரம,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான காலப் பகுதியினுள்,

(i) வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்;

(ii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்;

(iii) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட பணிகள்;

(iv) தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

(v) இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஆற்றப்பட்ட மக்கள் சேவைகள்;

வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 ஓகத்து 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2603/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 66 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) இற்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடாத்தப்படாமையினூடாக, தவறுகள் புரிபவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதில்லை எனும் உணர்வு ஏற்படலாம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பாகவும்;

(ii) சட்ட விரோத ஆயுதம் தாங்கிய குழுக்கள் தொடர்பாக தனது இடைக்கால சிபாரிசுகள் பூரணமாகச் செயற்படுத்தப்படாமை தொடர்பாக அவ்வாணைக்குழு கவலை தெரிவிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பாகவும்

அரசாங்கத்தின் பதில் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2932/ '12

கௌரவ புத்திக பதிரண,—சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் முகவரிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) இவர்கள் தற்போது பெறுகின்ற கொடுப்பனவுகள் உள்ளிட்ட சலுகைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி திரு. என். டீ. குமாரசிங்கவுக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், ஏனைய சலுகைகள் யாவை என்பதையும்;

(ii) 2012 சனவரி தொடக்கம் இற்றைவரையிலான இவரது நிரந்தர சேவை நிலையம் யாது என்பதையும்;

(iii) கலாநிதி திரு. என்.டீ. குமாரசிங்கவிடமிருந்து கடந்த காலத்தில் கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்ற சேவை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2941/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் பொலிஸ் தொடர்பாக,

(i) 2012 ஜூலை 1 ஆம் திகதியிலுள்ளவாறும் மற்றும் இற்றை வரைக்கும் காணமற்போன அல்லது கடமைக்குச் சமூகமளிக்காத திணைக்களத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற் கூறிய தலைமறைவிற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தலைமறைவாகியுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா அல்லது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதா அல்லது அவர்களின் குற்றப்பணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்;

(iv) மன்னிப்பு வழங்கப்படாவிடின், சட்டரீதியான அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறெனில், சட்டரீதியாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஆளணியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இலங்கை பொலிசிலிருந்து ஆளணியினர் கடமையிலுள்ள போது காணாமற்போனமையால் அல்லது சேவையிலிருந்து தலைமறைவான காரணத்தால் மீதப்படுத்தப்பட்டுள்ள பணத்தொகையையும் அவர் கூறுவரா?

(இ) இன்றேல், ஏன்?

3059/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பட்டதாரி பயிலுநர் பிக்குமார்களுக்கு அரச சேவையில் நியமனங்கள் வழங்குவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(ii) பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த சுமார் 580 பிக்குமார்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டு அரசு சார்ந்த பிரிவெனா நியமனங்களுக்கு மாத்திரம் பிக்குமார்களை மட்டுப்படுத்தும் அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி நிலைமை காரணமாக சாசன ரீதியான பாரிய நெருக்கடியொன்று ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் காணப்படுகின்ற தொழிலற்ற பட்டதாரி பயிலுநர் பிக்குமார்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அரசு சார்ந்த பிரிவெனா சேவைகளுக்கு மாத்திரம் பட்டதாரி பிக்குமார்களை மட்டுப்படுத்துவதற்கு கொண்டு வரப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) பட்டதாரி பிக்குமார்களுக்கு துரிதமாக அரச சேவையில் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3264/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கெட்பதற்கு,— (1)

(அ) (i) கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக 2012 ஓகத்து மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி நிலையங்களால் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, அதற்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை, சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கொரிய அரசின் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டு கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டுக் கடவுச் சீட்டு கட்டாயமாக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3348/ '12

கௌரவ பி. ஹரிசன்,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3411/ '13

கௌரவ அஜித் பி.பெரேரா,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செயற்பாடு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகள் அல்லது குறைவாகப் பயன்படுத்துகின்ற சொத்துக்களுக்கு புத்துயிரளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நட்டஈட்டு நியாய சபையினது அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அங்கத்தவரும் தமது சேவையை வழங்குதல் சார்பாக இதுவரை பெற்றுள்ள சம்பளத்தின் அல்லது கொடுப்பனவின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இவர்கள் மேற்படி பதவிகளைப் பெறுவதற்கு முன்னர் 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க செயற்பாடு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகள் அல்லது குறைவாகப் பயன்படுத்துகின்ற சொத்துக்களுக்கு புத்துயிரளித்தல் சட்டத்தின் கீழ் அரசினால் சுவீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்லது சில நிறுவனங்கள் சார்பாக தொழில்சார் சேவைகளை தனிப்பட்ட முறையில் வழங்கியுள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3414/ '13

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் பேசாலையைச் சேர்ந்த இராமசாமி பிரான்சிஸ் ரஞ்சன் என்பவர் கைது செய்யப்பட்டு சிறையிலிடப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர் உள்ள சிறைச்சாலை எதுவென்பதையும்;

(iii) இவர் சிறைக்கைதியாகவா அல்லது சந்தேக நபராகவா சிறையிலிடப்பட்டுள்ளார் என்பதையும்

(iv) இவருக்கு எதிராக நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

(v) ஆமெனில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, குறிப்பிட்ட நீதிமன்றம், வழக்கு இலக்கம் மற்றும் வழக்கின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமைக்கான குற்றச்சாட்டுக்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இராமசாமி பிரான்சிஸ் ரஞ்சன் என்பவரை சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3466/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரூபா 27 கோடிக்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட 450 தொன்னுக்கும் அதிகமான பால் மாவை விற்பனை செய்வதற்காக மில்கோ கம்பனியினால் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா;

(ii) அவ்வாறெனின், அத் திகதி யாது;

(iii) மேற்படி பால்மாவை சந்தைக்கு வழங்காது வெளியில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உலக சுகாதார அமைப்பின் தரத்துக்கமைய பால் மா உற்பத்தியின்போது ஐதரசன் பெரொக்சைட்டை பயன்படுத்த முடியுமா;

(ii) மேற்படி பால் மாவில் ஐதரசன் பெரொக்சைட் கலக்கப்பட்டுள்ளதா;

(iii) அதில் உள்ளடங்கியுள்ள ஐதரசன் பெரொக்சைட்டின் அளவு பற்றி பரிசோதிக்கப்பட்டதா;

(iv) அவ்வாறெனின், அதன் அளவு எவ்வளவு;

(v) மேற்படி அளவு மனித நுகர்வுக்கு உகந்ததா;

(vi) மேலே குறிப்பிடப்பட்ட பால் மா நேரடியல்லாத முறைகளின் மூலம் மீண்டும் பொதுமக்களை சென்றடையலாம் என்னபதை அவர் ஏற்றுக் கொள்வாரா

என்பதை அவர். இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பால் மாவை விற்பனை செய்தல் மில்கோ நிறுவனத்தின் பால் மா உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தாதா;

(ii) மேற்படி பால் மாவை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iii) சந்தைப்படுத்தப்படுகின்ற மேற்படி பால் மாவுக்குப் பதிலாக மேலதிக பால் மாவை உற்பத்தி செய்கின்றபோது உயர் உற்பத்திக் கொள்ளளவினைப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3469/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சனாதிபதியவர்கள் பங்கேற்றுள்ள வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சுற்றுப் பயணத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின்போதும் சனாதிபதியவர்களுடன் பயணம் செய்தோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின்போதும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணம், பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கை மூலம் நாட்டுக்குக் கிடைத்த அல்லது கிடைத்துக்கொண்டிருக்கின்ற அல்லது கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3583/ '12

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளம் எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2012.03.16 ஆம் திகதி முதல் இ.போ.ச. ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 39% ஆல் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ii) மேற்படி சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(iii) இன்றேல், நிலுவைச் சம்பளத்துடன் மேற்படி சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் திகதி யாது

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3778/ '13

கௌரவ விஜித பேருகொட,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் வழிப்படுத்தலில் மக்களுக்கு "டிமோ பட்டா" லொறிகளை வழங்குவதற்கான நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி லொறிகளை வழங்கும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி அளவுகோல்களின் அடிப்படையில் இன்றளவில் வழங்கப்பட்டுள்ள லொறிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி லொறியொன்றின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி லொறிகள் வழங்கப்படும் முறையியல் தொடர்ச்சியாக பேணப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி லொறிகள் வங்கிக் கடன் மூலம் வழங்கப்படுமாயின், ஏற்புடைய வங்கியாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) குறிப்பிட்ட கடன் தொகை வழங்கப்படுவது வட்டியுடனா அல்லது வட்டியின்றியா என்பதையும்;

(iii) மேற்படி கடன் தவணைத் தொகையொன்றின் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3859/ '13

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்ரம,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் செயற்படுத்தப்படுகின்ற,

(i) 'அறிவகம்' கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏதுவான காரணங்கள் யாவை;

(ii) தற்போது இயங்குகின்ற அறிவகம் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அறிவகம் கருத்திட்டத்தினால் வழங்கப்படுகின்ற பயிற்சியின் சிறப்பியல்பு யாது;

(iv) அறிவகம் கருத்திட்டத்தின் எதிர்கால திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3861/ '13

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேகா,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான காலப்பகுதியில் 'இ-ஸ்ரீலங்கா' (E - Sri Lanka) அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம்,

(i) அரசதுறை மீள்கட்டமைப்பின் ஊடாக பெறப்பட்ட வெற்றிகரமான பெறுபேறுகள் யாவை;

(ii) தகவல் தொழில்நுட்பவியல் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் போட்டித்தன்மையின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றிகரமான பெறுபேறுகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 'இ ஸ்ரீ லங்கா' அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு கிடைத்துள்ள சர்வதேச விருதுகள் மற்றும் வெற்றிகள் யாவை;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால கருத்திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3864/ '12

கௌரவ மனுஷ நாணாயக்கார,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் வழிகாட்டலில் தெங்குச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ள 'கப்ருக்க' சங்கங்களுக்கு அளிக்கப்படும் பொறுப்பு எது என்பதையும்;

(ii) தற்போது கப்ருக்க சங்கங்களில் சேர்ந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) நாடளாவிய ரீதியில் கப்ருக்க சங்கங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனின், நாடு முழுவதும் கப்ருக்க சங்கங்களைத் தாபித்து முடிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கப்ருக்க புரவர நிகழ்ச்சித்திட்டம் என்றால் யாதென்பதை அவர் இச்சபையில் விளக்குவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 ஒகத்து 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2604/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 69 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் ஆகியன தொடர்பாக ஆட்சியிலுள்ள கட்சியின் அரசியல்வாதிகளின் தலையீடு அதிர்ச்சியளிக்கும் காரணியொன்றாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவினால் சுயாதீன பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவொன்று தாமதமின்றி நியமிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ள சிபாரிசு செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இவ்வாணைக்குழு நியமிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2933/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் வல்லிவல மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிமானகம வீடமைப்புத் திட்டம் அமைந்துள்ளதென்பதையும்;

(ii) 1985 ஆம் ஆண்டில் வெலிகம, அபிமானகம வீடமைப்புத் திட்டத்திற்கு அருகாமையிலுள்ள காணியொன்று இலங்கையின் முதலாவது நகர வனப் பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டது என்பதயும்;

(iii) வனப் பூங்காவை கொண்ட மேற்படி காணியை 2012 மே மாதம் 23 ஆம் திகதி தினமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் ஊடாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நகர வனப் பூங்காவை விற்பனை செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2943/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் கல்விக்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) கல்விக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3265/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மில்கோ கம்பனியின் அம்பேவெல கிளையில் பால் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் இல்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) அம்பேவெல கிளையில் களஞ்சிய வசதி இன்மையினால் பால் மாவை உற்பத்தி செய்வதற்காக கிரீமாக மாற்றப்பட்டிருந்தபோது அப்புறப்படுத்தப்பட்ட பால் லீற்றர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) மேற்படி பாலின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மில்கோ கம்பனியின் மாதாந்த வருமானம் மற்றும் தேறிய இலாபம் எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3349/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3412/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வேரெஸ் கங்கை மழை நீர் வெளியேற்றம் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் என்ற பெயரிலான ஒரு கருத்திட்டத்திற்காக தனியார் காணிகளை அரசாங்கத்தினால் சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காணிகளின் அளவு எவ்வளவு;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரசினால் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நட்டஈடு செலுத்தும்போது பின்பற்றப்படும் கொள்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3415/ '13

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரியந்த குணரத்ன என்பவர் கைதுசெய்யப்பட்டு சிறையிலிடப்பட்டுள்ளாரா;

(ii) ஆமெனில் இவர் உள்ள சிறைச்சாலை எது;

(iii) இவர் ஒரு சிறைக்கைதியாகவா அல்லது சந்தேக நபராகவா சிறையிலிடப்பட்டுள்ளார்;

(iv) இவருக்கு எதிராக நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, குறிப்பிட்ட நீதிமன்றம், வழக்கு இலக்கம், மற்றும் வழக்கின் தற்போதைய நிலைமை யாது;

(vi) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பிரியந்த குணரத்ன என்பவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3441/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக சீனாவிடமிருந்து மேலதிகமாக 153 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கடன் எந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் (வட்டி வீதம், கால எல்லை, வேறு கட்டணங்கள்) கீழ் பெற்றுக்கெள்ளப்பட்டது என்பதையும்;

(ii) எவ்வங்கியிடமிருந்து இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் தரகர்கள் சம்பந்தப்பட்டிருப்பின் அவர்கள் உள்நாட்டவர்களா அல்லது வெளிநாட்டவர்களா என்பதையும்;

(iii) அனைத்து மூலங்களிலிருந்தும் இதுவரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் மற்றும் அவை ஒவ்வொன்றினும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கடன் நிபந்தனைகள் மூல ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதன் பின்னர் எப்போதாவது மாற்றப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவரா?

(இ) இன்றேல், ஏன்?

3513/ '13

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த திப்பட்டுமுல்ல கனிஷ்ட வித்தியாலயம் பல வருடங்களாக மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலய வளவு மற்றும் கட்டடங்கள் சம்பந்தமாக மாகாண சபையோ மத்திய அரசாங்கமோ இற்றைவரை எவ்விதமான கவனமும் செலுத்தவில்லையென்பதையும்;

(iii) இதன் காரணமாக ஒருசிலர் வித்தியாலய வளவினை கைப்பற்றியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வித்தியாலயத்திற்குச் சொந்தமான காணியளவு, கட்டடங்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் யாவை என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) திப்பட்டுமுல்ல கனிஷ்ட வித்தியாலயம்

(i) மூடப்பட்ட திகதி;

(ii) மூடப்பட்ட வேளையில் கல்வி பயின்ற மாணவர் எண்ணிக்கை மற்றும் சேவையாற்றிய ஆசிரியர் எண்ணிக்கை;

(iii) மூடப்பட்டமைக்கான காரணங்கள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மூடப்பட்டுள்ள இப்பாடசாலையை அபிவிருத்திசெய்து மீண்டும் ஆரம்பிக்க அல்லது பாடசாலை வளவினையும் அதன் கட்டடங்களையும் வேறு பயனுள்ள பணிக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3536/ '13

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் (TNA) நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு அம்மாகாண ஆளுநரிடம் வழங்கப்பட்ட பணத்தின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) உள்ளூராட்சி அமைப்புக்களிலிருந்து யாருடைய பணிப்புரையின் பேரில் இப்பணம் அறவிடப்பட்டதென்பதையும்;

(iii) கூறப்பட்ட பணம் எக்காரணத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3601/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரிய நாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களில், 2012 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக கொரியாவில் தொழில் வாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவ்வாறு அனுப்பப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3779/ '13

கௌரவ விஜித பேருகொட,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மொரட்டுவ/பாணந்துறை, அம்பதலே மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு வசதிகளை வழங்கும் கருத்திட்டத்தின் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) அதன் வேலைகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) இதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்துக்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி பணத் தொகையை செலவிட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3860/ '13

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்ரம,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

(ii) மேற்படி நிறுவனம் அரசாங்க கருத்திட்டங்களுக்கு நல்கிய பங்களிப்பு யாது;

(iii) அறிவின் பெறுமதியை பரப்புவதில் ஆற்றிய பங்களிப்பு யாது;

(iv) மேற்படி நிறுவனத்தின் எதிர்கால திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3862/ '13

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேகா,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் பரப்பளவு மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பயிர்ச்செய்கைகள் வெவ்வேறாக யாவை;

(iii) கடந்த அண்மித்த 10 ஆண்டு காலப்பகுதியினுள் ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெறப்பட்ட வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3865/ ’13

கௌரவ மனுஷ நாணாயக்கார,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தெங்குக் கைத்தொழில் விருத்திக்காக தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தெங்குச் செய்கையை மேற்கொள்ளும் ஏனைய நாடுகளுடன் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வாறான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டுடனும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கைகள் இலங்கையின் தெங்குக் கைத்தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தை சுருக்கமாக விளக்குவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?